**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 31/2022

பெயர் – ராமலிங்கம்(வா.சா.1)

நாள் – 16.03.2026

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம், பிராது ஆகியவற்றில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி போடப்பட்டுள்ளது என்றால் நான் சொல்லி தான் போடப்பட்டுள்ளது. இவ்வழக்கின் பிரதிவாதிகள் துர்க்கைபாண்டியன், லீலா ஆகியோர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் நான் படித்து பார்க்கவில்லை. துர்க்கைபாண்டியன் அப்பா பெயர் காளைபாண்டியன் என்றால் சரிதான்.

2) இவ்வழக்கில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மாமனார் சுடலைமுத்துதேவருக்கு பாத்தியப்பட்டது. எனது மாமனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு பிள்ளைகள், ஒருவர் பாண்டியம்மாள், மற்றொருவர் பெயர் மாரீஸ்வரி ஆகும். வா.சா.ஆ.1–ல் காட்டப்படும் சொத்தானது என் பெயருக்கு எவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது என்றால் அரசாங்கம் சர்வே செய்து எனக்கு பட்டா வழங்கப்பட்டது. ஆனால் சொத்தானது எனது மாமனாரின் அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரிதான். தற்போது எனது மாமனார் உயிருடன் இல்லை என்றால் சரிதான். மாரீஸ்வரி உயிருடன் இருக்கிறார் என்றால் சரிதான்.

3) பிரதிவாதிகள் எனக்கு இடைஞ்சல் செய்தது குறித்து சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். இதுகுறித்து சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் ரசீது வழங்கப்பட்டது என்றால் சரிதான். புகார் மனு ரசீது இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதியின் அப்பா காளைபாண்டி பெயரில் எனது வீட்டின் அருகே பட்டா எண்.124, 125, 126 ஆகிய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான்.

4) எனது வீட்டின் வடக்குபுறம் கிழமேல் பாதை உள்ளது என்றால் சரிதான். கிழமேல் பாதைக்கு வடக்கே எங்கள் பாத்ரூம் உள்ளது என்றால் சரிதான். அந்த பாத்ரூமின் வடக்கே துர்க்கைபாண்டியன் இடம் உள்ளது என்றால் சரியல்ல,

காலியிடம் தான் உள்ளது. பாத்ரூமின் கிழக்கே பாண்டியம்மாள், மாரீஸ்வரி ஆகியோரின் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் கட்டிய பாத்ரூமிலிருந்து சிறிது தூரம் தள்ளி மேஸ்திரி முனியாண்டியின் வீடு உள்ளது என்றால் சரிதான். எங்கள் பாத்ரூமின் மேற்கே மாடசாமி பூசாரியின் வீடு உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும், நாங்கள் கட்டிய பாத்ரூமிற்கும் இடையே உள்ள கிழமேல் பாதை எத்தனை அடி உள்ளது என்றால் 15 அடி அகலத்தில் உள்ளது. அந்த 15 அடி பொதுபாதைக்கு தனி சர்வே எண் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

5) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆனது தவறான தகவல்களை கூறி பெறப்பட்ட பட்டா என்றும், எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ன் மூலம் சொத்தானது எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் நான் கோரவில்லை என்றும், தடையுறுத்தரவு மட்டும் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் நீதிமன்ற ஆணையரை நியமித்து அளவீடு செய்தால் வழக்கு சொத்து யாரின் அனுபவத்தில் உள்ளது என்பது குறித்து தெரியவரும் என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.1 ஆனது 12.02.2020 அன்று பெறப்பட்டது என்றால் சரிதான். பொதுபாதைக்கு தெற்கே உள்ள இடம் தான் எனக்கு பாத்தியப்பட்டது என்றும், வடக்கே எனக்கு பாத்தியமில்லை என்றும், நான் தான் துர்க்கைபாண்டியனின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து பாத்ரூம் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னை தற்காத்து கொள்ளுவதற்காகவும், என் மீது வழக்கு வரக்கூடாது என்பதற்காகவும், நான் ஆக்கிரமிப்பு செய்து பின்னிட்டு 1, 2 பிரதிவாதிகள் மீது இவ்வழக்கை சோடனை செய்து தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) பிரதிவாதிகள் எனக்கு எவ்வித இடையூறும் செய்யக்கிடையாது என்றும், பிராதில் நான் கூறிய சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள பாத்ரூமானது துர்க்கைபாண்டியின் அப்பா பெயரில் பாத்தியப்பட்ட நிலம் என்றும், அவரை இவ்வழக்கின் சேர்க்காததால் அவசிய கட்சிகாரர்களை சேர்க்காத தோஷத்தினால் இவ்வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சார்பாக இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் சோடனை செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பாளர்

என்ற நிலையில் நான் இருப்பதால் இவ்வழக்கை தொடுப்பதற்கு தகுதியற்றவர் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தை சிவகாசியில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.